செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல: 1121 | 1970 ஆகஸ்ட் 29 சனிக்கிழமை | ★ ★ ★ | விலை சதம் 5

University of Jaffna Sri Lanka
Periodicals Division
Library

# அரசுக்கு உளவு பார்க்க ராணுவத்தில் தனிப்பிரிவு

**அரசாங்கத்துக்காக உளவு வேலைகளில் ஈடுபடுவதற்கென விசேஷ பிரிவு ஒன்றை இலங்கை ராணுவம் அமைத்துள்ளது.**

இந்த விசேஷ உளவுப் படைக்குத் தலைவராக காப்டன் டென்ஸில் ராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிகலே நியமித்துள்ளார்.

அரசாங்கத்துக்காக உளவு வேலைகளில் ஈடுபடும் பொறுப்பை பொலீஸாரே கவனித்து வருவது வழக்கம்.

ஆனல் சரித்திரத்திலேயே முதல் தடவையாக ராணுவத்தில் உளவுப் படைப் பிரிவு ஒன்று இப்போது அமைக்கப்பட்டுள்ளது.

இந்த உளவுப் படையில் இடம் பெறும் வீரர்களுக்கு துப்பறியும் பகுதியினர் பயிற்சி அளிப்பர்.

நாட்டில் பரவி வரும் சேகுவேரா நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கமாகவே இந்த விசேஷ உளவுப் படை நிறுவப்பட்டுள்ளது என நம்பப்படுகிறது. (ம)

## கொழும்பு

## மாநகர சபையின் பணம் மோசடி?

கொழும்பு மாநகர சபை தலைநகரைச் சுத்தமாக வைத்திருக்கச் செலவிடுவதற்காக வருடாந்தம் ஒதுக்கும் 60 லட்சம் ரூபாவில் சுமார் கால் பங்கு மாநகர சபை ஊழியர்கள் சிலரால் கையாடப்படுகிறதாம்.

மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் நடத்திய பரிசிலனைகள் மூலம் இது தெரிய வந்துள்ளது.

புதுக்கடை வட்டார உறுப்பினர் திரு. சார்ள்ஸ் வேதகன் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

கண்டிப்பான மேற்பார்வை ஒழுங்குகளை நிர்வாகம் சரியாகச் செய்யாததே பணம் இப்படி விரயமாகக் காரணம் என்று திரு. வேதகன் தெரிவித்தார்.

பத்து வருடங்களுக்கு முன்னர் மிகவும் சுத்தமான தலைநகர்களில் ஒன்ருகக் கொழும்பு விளங்கியது என்றும் அவர் கூறினர்.

"தற்காலிக ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவதோடு மாட்டு வண்டிகளை வாடகைக்கும் பெறும் உரிமை மாநகர சபை வேலைத் தலங்களுக்குப் பொறுப்பான ஓவசியர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. மேற்பார்வை நடைபெருதபோது நேர்மையற்ற ஓவசியர் ஒருவர் குறிக்கப்பட்ட அளவில் பாதி ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடுப்பதற்கு வழி ஏதும் கிடையாது. இந்த விபரங்கள் எனது குழு நடத்திய விசாரணைகளின்போது தெரிய வந்தன" என்றும் அவர் சொன்னர்.

## மீனாட்சி



என்னுங்க, நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கணக்கெடுப்பு நடத்திச்சுதாமே!

ஆமாங்க, அவ்வப்போது கணக்கெடுப்பு நடத்திஞல்தானே லாபம் நஷ்டம் அறிந்து பிஸிஸைச் சரியாய்க் கொண்டு போக முடியும்!

## மத்திய இடமாற்றச் சபை நிறுவும்படி கோரிக்கை

"சகல அரசாங்க சேவை ஊழியர்களின் இடமாற்றங்களைக் கவனிக்க மத்திய இடமாற்றச் சபை ஒன்று நிறுவப்பட வேண்டும். இச்சபை தொழில் சங்கங்களின் ஆலோசனையுடனேயே புதிய இடஇடமாற்றத் திட்டங்களை வகுத்து அமுல் நடாத்த வேண்டும்"

பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவிடம் மேற்கண்டவாறு வலியுறுத்தி உள்ளது சமஸ்த லங்கா ராஜய லிபிகரு சங்கமய.

ஒவ்வொரு அரசாங்க திணைக்கள ஊழியர்களுக்காகவும், வெவ்வேறு இடமாற்ற சபைகளை நிறுவும் திட்டம் அமுல் நடாத்தப்பட உள்ளதென அமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்த இடமாற்ற சபைகளில் தொழில் சங்கப் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர். இச்சபைகள் அடுத்தாண்டு ஜனவரி மாதம் 1-ம் திகதி கருமமாற்றுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி தொழிற் சங்கம் மத்திய இடமாற்றச் சபை நிறுவப்படும் வரை தற்போது நடைமுறையிலுள்ள இடமாற்றச் சபையே தொடர்ந்து இயங்க வேண்டுமெனக் கருத்து வெளியிட்டுள்ளது.

அத்துடன் 1964-ம் ஆண்டு டாக்டர் என். எம். பெரேரா மத்திய இடமாற்றச் சபை ஒன்று ஸ்தாபிப்பது பற்றிய திட்டம் ஒன்றை வகுத்திருந்தார். ஆனல் அத்திட்டம் இன்றுவரை செயல்படுத்தப் படவில்லை எனவும் மேற்படி சங்கம் அமைச்சருக்குச் சுட்டிக் காட்டியுள்ளது எனத் தெரிகிறது. (7)



ஓடிக் கொண்டிருந்த வான் ஒன்று திடீரென வீதியை விட்டு விலகிக் கடலில் போய் விழுந்தது- இந்த விபத்து காலிபேஸ் கடற்கரையில் நடைபெற்றது- கடலில் வான் விழுந்து கிடப்பதைப் படத்தில் காண்க. (ம)

## இந்திய கன்னியாஸ்திரிகள் இத்தாலியில் சந்தோஷமாக வாழ்க்கை

வத்திக்கான் ஆக 28

இத்தாலியில் உள்ள இந்திய கன்னியாஸ்திரிகள் நன்ருகக் கவனிக்கப்படுவதாகவும் அவர்கள் சந்தோஷமாக இருப்பதாகவும் பிரபல வார சஞ்சிகையொன்று ஐந்து பக்கங்களில் செய்தி வெளியிட்டுள்ளது.

எல் -ஒஸவாதொர டெல்லா டொமெனிகா", என்ற இவ்வார சஞ்சிகை வழமைக்கு மாருக ஒரு நாள் பிந்தியே இன்று வெளியிடப்பட்டது.

இந்திய கன்னியாஸ்திரிகள் பற்றிய செய்தியைத் தயாரிப்பதற்காக சஞ்சிகை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதாக வத்திகான் அறிவித்துள்ளது.

இந்திய கன்னியாஸ்திரிகள இத்தாலியில் கொடுமைப் படுத்தப்பட்டு கூலிகள் போல் வேலை வாங்கப்படுகின்றனர், என்ற சில பத்திரிகைச் செய்திகளை மறுத்தே இச்சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய கன்னியாஸ்திரி ஒருவர் அருகே நிற்க வெள்ளைக்காரகன்னியாஸ்திரி ஒருவர் சில துணிமணிகளை "ஸ்திரி" போடுவதாகக் காட்டும் படமொன்றும் வெளியிடப்பட்டிருந்தது. (ல)

## சோவியத் தூதுவர்

கொழும்பு, ஆக- 29

இலங்கையில் சோவியத் தூதுவராக திரு- ராபிக் நிஷனேவ் நியமிக்கப்பட்டு உள்ளார்-

திரு- வி- பி- ஸ்டீபனேவின் இடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்- புதிய தூதுவர் திரு- நிஷனேவுக்கு 44 வயது ஆகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பக்கத்து வீட்டு பருவ எஜமான்

# 'அறையினுள் வைத்து என்னைக் கற்பழித்தார்'

## 15 வயது வேலைக்காரி கோர்ட்டில் சாட்சியம்

கல்கிசை, ஆக- 28

"பக்கத்து வீடொன்றின் வாலிப எஜமானர் என்னை அறையொன்றுக்கு அழைத்துச் சென்று எனது விருப்பத்துக்கு மாறாகக் குற்றம் புரிந்தார்" என்று கூறிய இளம் பெண் சிறியாவதி கண்ணீர் விட்டழுதாள்.

ஹோமகமை இராணுவ முகாம் கற்பழிப்பு வழக்கில் சாட்சியமளித்த திருமதி பியட்ரிஸ் ஜான்சஸன் என்ற பெண் மேற்கண்டவாறு கூறினர்.

இவ் வழக்கில் 15 வயதான வேலைக்காரப் பெண் ஒருத்தியை கற்பழித்ததாக கொழும்பிலுள்ள பிரபல கல்லூரி ஒன்றின் மாணவரான லலந்தா பெர்னாட் பெர்னாண்டோ என்ற 21 வயது வாலிபன் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளான்.

திருமதி பியட்ரிஸ் ஜான்ஸன் சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:—

"எனது கணவரான கேர்ணல் ஜான்ஸன் பல வருடங்களாக இராணுவ முகாம் விடுதியில் வசித்து வருகிறார். காப்டன் லாறி பெர்னாண்டோ எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் வசிக்கிறார். அவரையெனக்குத் தெரியும்.

சிறியாவதி எங்கள் வீட்டில் வேலைக்காரியாக இருந்தாள். சம்பவ தினத்தன்று முட்டை ஒன்று வாங்கி வரும்போது அவளை காப்டன் லாறி பெர்னாண்டோவின் வீட்டுக்கு 25 சதம் கொடுத்து அனுப்பினேன்.

சிறியாவதி வருவதற்கு தாமதமானதால் நான் அவளைக் கூப்பிட்டேன். சிறிது நேரத்தில் வந்த அவள், "புஞ்சி மஹத்தயா" எனப்படுபவர் தன்னை அறையொன்றுக்கு அழைத்துச் சென்று குற்றம் புரிந்ததாகக் கூறினள்.

நான் காப்டன் பெர்னாண்டோவின் பங்களாப் பக்கமாகச் சென்று பார்த்தபோது அங்கு ஒருவரும் இருக்கவில்லை.

இக்கட்டத்தில் வழக்கின் மேல் விசாரணை செப்டெம்பர் 25-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

திரு. குவின்டின் பெரேரா எதிரி தரப்பில் ஆஜரானர். (ல)

## டீஸ் சாரதி விடுதலையானர்

கைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவரை மோதி மரணம் உண்டு பண்ணியதாகக் கூறப்படும் டீஸ் சாரதியொருவரை கொழும்பு மேலதிக நீதிபதி திரு. நந்தா விஜேசேகரா நேற்று விடுதலை செய்தார்.

## கொலையுண்ட இளம் பெண் கருத்தரித்திருந்தாள்

### —டாக்டர்

காலி, ஆக. 28

"ரயில் ஏறியதால் இப் பெண் இறக்கவில்லை. தலையில் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட காயங்களினுலேயே இப் பெண் மரணமடைந்திருக்கிறுள். அடிபட்டு சுமார் 20 நிமிட நேரம் மயக்கமாக இருந்த பின் இவள் இறந்திருக்கக் கூடும்."

காலி உதவிச் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் என். சரவணபவான் மேற்கண்டவாறு கூறினர்.

ரயில் பாதையருகில் கொலை செய்யப்பட்டுக் கிடந்த பெண் சம்பந்தமான விசாரணை நீதிபதி திரு. கே. சேனதிராஜா முன் விசாரிக்கப்பட்ட போதே டாக்டர் மேற்கண்டவாறு சொன்னர்.

இவ் வழக்கில், மாபெல் பேட் என்ற பெண்ணின் மரணம் சம்பந்தமாக பி. ஆர்தர், பி. எல். சிறிபால ஆகிய இருவரும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

டாக்டர் சரவணபவான் தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"இறந்த பெண்ணை நான் பரிசோதனை செய்தேன். உடம்பில் 15 வெளிக் காயங்களும், மூன்று உள் காயங்களும் இருந்தன. இறந்த சமயம் அப் பெண் நான்கு அல்லது ஐந்து மாதக் கர்ப்பிணியாக இருந்தாள். மூளையிலும் காயம் ஏற்பட்டிருந்தது. மண்டை ஓடு உடைந்திருந்தது. கடுமையான தாக்குதலினுல் ஏற்பட்ட அதிர்ச்சியாலும், இரத்தப் பெருக்காலுமே மரணம் சம்பவித்திருக்கிறது.

நான்கு அல்லது ஐந்து முறை காலஞ்சென்ற பெண் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறுள். அநேகமாக இரும்புப் பொல் ஒன்றினுல் இந்தத் தாக்குதல் நடைபெற்றிருக்க வேண்டும்.

ரயில் மோதுண்ட ஒருவருக்கு ஏற்படும் காயங்களை விட இறந்த பெண்ணின் காயங்கள் மாறுபட்டிருந்தன.

மேல்விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (ல)

### ஷாரன்டேட் வழக்கில்

## லாபியன்கா கொலை பற்றி விசாரணை ஆரம்பமானது

லாஸ்ஏன்ஜல்ஸ், ஆக. 28

ஷாரன்டேட் கொலைவழக்கில் புதிய திருப்பம்! இதுவரை திரை உலகநட்சத்திரங்களையும் போதை பொருள் பாவிப்போரையும் மற்றும் சிலரின் கவனத்தையும் மட்டுமே ஈர்த்திருந்த இக் கொலை வழக்கு இப்போது நகர வகுப்பினரையும் கவர்ந்துள்ளது.

"சுப்பர் மார்க்கட்" உரிமையாளரான லெனே லாபியன் கா கொலை பற்றிய நேற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

நடிகை ஷாரன் டேட்டை கொலைசெய்ததாக ஹிப்பிகள் தலைவன் மான்சன் மீதும் பெண்கள் மூன்று ஹிப்பி பெண்கள் மீதும் கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பது தெரிந்ததே.

ஷாரன் டேட்டுடன் இன்னும் 5 பேர் கொலையுண்டிருந்தனர். இக் கொலை நடந்த மறுதினம் 12 மைல்களுக்கு அப்பால் சுப்பர் மார்க்கெட் உரிமையாளர் லெனே லாபியன்காவும் (44) அவர் மனைவியான ரோஸ் மேரியும் (38) பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த இரட்டைக் கொலைபற்றி மான்சன் உட்பட நால்வர்மீது குற்றஞ் சாட்டப்பட்டு உள்ளது. இவர்களில் மற்ற மூவரும் இளம் பெண்களாவர்.

கொலை செய்யப்பட்ட லாபியன்காரின் மார்பில் மூன்று புள்ளடிகள் இடப்பட்டிருந்தன. கழுத்தில் கத்தியாலும் வயிற்றில் முள்ளுக் கரண்டியாலும் குத்தப்பட்டிருந்தது.

அவருடைய மனைவியின் உடம்பில் 40க்கும் அதிகமான கத்திக் குத்துக் காயங்கள் இருந்தன.

காலஞ்சென்ற லாபியன்காரின் பெறுமகன் பிராங் ஸ்ருத்தர்ஸ் (16) நேற்று சாட்சியமளித்தான்.

நேற்று முன்தினம் வழக்கு விசாரிக்கப்பட்ட போது எதிரி மான்சனுக்கு சைகை காட்டியதாக நீதிமன்றத்திலிருந்து ஒருவர் வெளியேற்றப்பட்டார்.

பொலிஸ் இரசாயன பரிசோதகர் ஒருவர் சாட்சியம் அளிக்கையில், கொலை செய்யப்பட்ட நடிகை ஷாரன்டேட்டின் வீட்டில் "பன்றி" என்று எழுதப்பட்டிருந்த சொற்கள் நடிகையின் இரத்தத்தால் எழுதப்பட்டிருந்ததாகக் கூறினர். (ல)

## எஹலியகொடை காடையர் பற்றி எம். பி. முறையீடு

தெரணியகலை, ஆக. 28

எஹலியகொடை குடியிருப்பாளர்கள் "காடையர் கோஷ்டி" ஒன்றினுல் கஷ்டத்துக்குள்ளாக்கப்படுகின்றனர் என தெஹியோவிற்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தனபால வீரசேகரா பொலீஸ் மா அதிபரிடம் புகார் கூறியிருக்கின்றார்.

இந்தக் காடையர் கோஷ்டி கன்னியர்களைக் கற்பழித்தல், பிக்பாக்கெட் அடித்தல், வீடுகளுக்கு தீ வைத்தல் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றது என அறியப்படுகின்றது. (ல-3)

## தோட்டத் தொழிலாளருக்கு ஐஞப் அஸீஸ் கோரிக்கை

பஞ்சப்படி 17.50 போராட்டத்திலும் மற்றைய வேலைநிறுத்தங்களிலும் பங்குபற்றியமைக்காக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தால் அவர்கள் உடனடியாக ஐ. தொ. கா. மத்திய காரியாலயத்திற்கு அறிவிக்கும்படி ஐ. தொ. கா. தலைவரும், நியமன எம். பியுமான ஜனப் ஏ. அசீஸ் ஐ. தொ. கா. தோட்டக் கமிட்டி, மாவட்டக் கமிட்டி உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கை ஒன்றில் கோரியுள்ளார்.

மேலும் அவர் தன் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:—

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி பீடம் ஏறியபின் நடைபெற்ற வேலை நிறுத்தங்களில், தோட்டத்தொழிலாளர்கள் நடத்திய வீரப் போராட்டமும் ஒன்றாகும். இவ் வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றியமைக்காக வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் பதவி குறைக்கப்பட்டவர்கள் ஆகியோரும் இன்னும் மற்ற வேலைநிறுத்தங்களில் கலந்து கொண்டமைக்காக பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் உடனடியாகத் தங்களின் பெயரையும், முகவரியையும் ஏனைய விபரங்களையும் ஐ. தொ. கா. மத்தியக் கமிட்டிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கம் நியமித்துள்ள தொழில் கமிட்டியின் சிபார்சுப்படி போராட்டத்தில் பங்குபற்றி வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட இருப்பதோடு, போராட்டக் காலத்திலிருந்து அவர்களுக்கு சம்பளமும் வழங்கப்பட இருக்கிற தென்பதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன். (ல)

## குமரி குளிக்கும் போது எட்டிப் பார்த்தவருக்கு நல்ல உதை

காத்தான்குடி, ஆக. 28

காத்தான்குடியை அடுத்துள்ள ஆரையம்பதியில் உள்ள வீடு ஒன்றில் குளித்துக் கொண்டிருந்த அழகான பருவக் குமரியை வேலிக்கு மேலாக எட்டிப் பார்த்த வாலிபருக்கு விழுந்ததாம் அடி.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

ஒவ்வொரு நாளும் இப் பருவப் பெண் குளித்துக்கொண்டிருக்கும் போது எப்படியோ அந்த நேரத்திற்கு அவ்விடத்திற்கு வாலிபர் வந்து அப் பெண்ணின் அங்க அழகை ரசித்துக்கொண்டு நிற்பாராம்.

இதைப்பற்றி இப் பருவப் பெண் தன் அண்ணனிடம் ஏற்கனவே கூறியிருந்தாளாம்.

அண்ணன் தக்க தருணம் வரும் வரையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்து வாலிபர் வேலிக்கு மேலாக எட்டிப் பார்க்கும்போது ஓடோடி வந்து விட்டாராம் செம்மையான உதை.

எதிர்பாராத அடி விழுந்ததை உணர்ந்த வாலிபன் இப்போது அந்தப் பக்கம் தலை காட்டுவதே இல்லையாம். (ல- 135)

### விரைவில் செயற்படுத்துக

பல்கலைக்கழகங்களுக்கு அண்மையில் மாணவர் விடுதிகளை நிறுவ வீடமைப்பு அமைச்சு ஆலோசித்திருப்பது நற்பயன் தரும் செயலாகும். இன்று பேராதனையிலும், கொழும்பிலும் தங்கியிருப்பதற்குப் பல்கலைக்கழக மாணவர்கள் படும் அவஸ்தை சொல்லுந்தரமன்று. இப்போது ஆலோசனையிலுள்ள விடுதிகளில் உண்டியும், உறையுளும் நிதானமான கட்டணத்திற்கு வழங்கும் ஏற்பாடும் உண்டு. எனவே இத்தகைய விடுதிகள் அமைக்கப்பட்டால் தனிப்பட்டவர்கள் வீடுகளில் எத்தகைய சௌகரியமும் கிடைக்காது பலர் ஒரு அறையில் தங்கி இன்னல்படும் இயமகண்டம் நீங்கிவிடும் என்பது உறுதி. இந்த ஆலோசனையை அரசு ஏற்று விரைவில் செயற்படுத்த வேண்டும்.

தந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கிய வழக்கில் முறைப்பாட்டுக்காரர் சாட்சியம்

# ஒரே ஒரு அறைவிட்டார் இருபற்கள் உடைந்தன!

## அவற்றில் ஒன்று வயிற்றுக்குள் சென்றது

கல்கிசை, ஆக. 28

"எதிரி எனக்கு ஒரு அறைதான் விட்டார்- என்னுடைய இரண்டு பற்கள் உடைந்தன- அவற்றில் ஒன்று வயிற்றுக்குள் சென்றது- எனது வாயைப் பொத்திக் கொண்டு நான் பொலீஸ் நிலையத்துக்குச் சென்றேன்-"

தென் கொழும்பு மேலதிக நீதிபதி திரு. ஜோர்ஜ் அத்துருபான முன் விசாரிக்கப்பட்ட வழக்கொன்றில் நாராஹேன்பிட்டியாவைச் சேர்ந்த தனபால ஏக்கநாயக்க என்பவர் மேற்கண்டவாறு சொன்னார்.

இவ்வழக்கில்; கிருலப்பனை சித்தார்த்த லேனைச் சேர்ந்த சனி எனப்படும் எஸ். டொன் சாதிரிஸ் அப்பு, தனபால ஏகநாயக்காவைக் கைகளால் தாக்கிப் படுகாயம் விளைவித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

முறைப்பாட்டுக்காரர் மேலும் கூறியதாவது:—

"சம்பவதினம் காலை 10-30 மணிபோல் சைமன் என்ற என் நண்பனைச் சந்திப்பதற்காக கிருலப்பனையில் உள்ள வீடொன்றுக்கு நான் சென்றேன்.

"நான் வீட்டுக்குள் சென்று "சைமன், சைமன்" என்று அழைத்தேன். அப்போது "நீயார்?" என உள்ளேயிருந்து ஒருவர் கேட்டார். சிறிது நேரத்தில் எனது கன்னத்தில் ஓர் அடி விழுந்தது.

"இந்த அடியினால் எனது மேல் பல் வரிசையில் இரண்டு பற்கள் உடைந்தன. நான் உடனே பொலீஸுக்குச் சென்று முறைப்பாடு செய்தேன்.

"இச்சம்பவம் நடந்த போது எதிரியான சனியும் அங்கு இருந்தார். சைமனும் அவர் மனைவியுமே அந்த வீட்டில் இருக்கின்றனர். வேறு விஷயமாக சனி என்னுடன் மனஸ்தாபம் அடைந்துள்ளார்."

முறைப்பாட்டுக்காரரின் நாடியில் வேறு ஏதும் வருத்தம் உண்டாவென எதிர்தரப்பு வழக்கறிஞர் கேட்டபோது தனக்கு வேறு எந்த வருத்தமும் இல்லையென முறைப்பாட்டுக்காரர் பதில் கூறினார்.

சனி கொடுத்த அறை காரணமாகவே தன் பற்கள் உடைந்ததாக முறைப்பாட்டுக்காரர் மேலும் கூறினார்.

வழக்கின் மேல் விசாரணை செப்டெம்பர் முதல் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ல)

---

## ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கைக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் 30 லட்சம் பவுண் பெறுமதியான பொருளாதார உதவி வழங்கும் கடன் ஒப்பந்தம் ஒன்று நேற்று கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் திரு. மக்கின்டொஷும், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் திட்ட தொழில் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் எச். ஏ. டி. எஸ். குணசேகராவும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். (ல)

---

## அம்மண நாட்டியம் ரத்துச் செய்யப்பட்டது

ஹேக், ஆக. 28

ஸ்கொத்லாந்தின் தலைநகரான எடின்பேர்க்கில் நடைபெற இருந்த விழா ஒன்றில் அம்மண நடனம் ஆடுவதற்கு சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருந்த தெனினும் இறுதி நேரத்தில் இந்த நடனம் ரத்துச் செய்யப்பட்டது.

டச்சு நடனத் தியேட்டர் ஒன்றினால் இந்த அம்மண நடனத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ரத்துச் செய்யப்பட்ட அம்மண நடனத்தில் ஆண்களும் பெண்களும் கலந்து கொள்ள இருந்தனர் என்றும் இது ஒரு கதையைச் சித்திரிக்கும் அருமையான நடனமென்றும் ஏற்பாடு செய்தவர்கள் கூறினர்.

ஒல்லாந்திலும் டச்சிலும் இந்த நடனங்கள் காட்டப்பட்ட போது ஒரு விதமான எதிர்ப்பும் இருக்கவில்லை என நடனத் தயாரிப்பாளர்கள் கூறினர்.

நடனக்காரர்கள் மேடை மீது அம்மணமாக நின்று அங்க அசைவுகளைக் காட்டும் சமயத்தில் அவர்களுக்குப் பின் உள்ள திரையொன்றில் அம்மணக் காட்சிகளைச் சித்தரிக்கும் சினிமாவும் காட்டப்பட இருந்தது.

ரத்து செய்யப்பட்ட இந்த நடனம் விரைவில் லண்டன், மேற்கு ஜெர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் காட்டப்படும் எனத் தெரிய வருகிறது. (ல)

---

## பாதுகாப்புச் சட்டம்

கான்பரா, ஆக. 28

எம். பிக்களையும், சிவில் சேவை அதிகாரிகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பயமுறுத்துவது, தாக்குவது ஆகிய நடவடிக்கையிலிருந்து பாதுகாக்க ஆஸ்திரேலிய அரசாங்கம் சட்டம் இயற்ற இருக்கிறது.

---

## மனைவியுடன் வீடு திரும்பிய கணவனுக்குத் துப்பாக்கிச் சூடு

ஊர்காவற்றுறை, ஆக. 28

"சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நானும் எனது அன்புக் கணவரும் எங்கள் தோட்டப் பயிர்களுக்கு நீர்பாய்ச்சிய பின் மரவள்ளித் தோட்டத்தினூடாக வீடு திரும்பிக் கொண்டிருந்தோம். அப்போது முதலாவது எதிரி, "அவன் வந்து கொண்டிருக்கிறான் சுடு" என்று கூறியதை நான் கேட்டேன். உடனடியாக சத்தம் வந்த திசையை நோக்கி எனது "டோர்ச்" விளக்கைப் பிடித்தேன்.

முதலாவது எதிரி "டோர்ச் லைட்" ஒன்றுடனும், 2-ம், 3ம் எதிரிகள் தமது கைகளில் ஒவ்வொரு துப்பாக்கியுடனும் நிற்பதைக் கண்டேன். முதலாவது எதிரி எனது கணவன்மீது டோர்ச் லைட்டை அடித்துப் பிடித்தபடி நிற்க 2 துப்பாக்கிச் சூடுகள் எனது கணவரை நோக்கித் தீர்க்கப்பட்டன. சிறிது நேரத்தில் மூன்றாவது துப்பாக்கிச் சூடும் கணவன்மேல் தீர்க்கப்பட்டது."

கதிரிப்பாய் கொலைவழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஆனந்தகுமாரசுவாமி முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கொலையுண்ட எஸ். கந்தசாமி என்பவரின் மனைவி மனோன்மணி மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வழக்கில், எஸ். கந்தசாமி என்பவரின் கொலை விஷயமாக வி. இரத்தினவடிவேல், எஸ். முத்துலிங்கம், தே. ஜீவரத்தினம் ஆகிய மூவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மனோன்மணி தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில் தெரிவித்ததாவது:—

"முதலாவது எதிரி எனது கணவருடைய வீட்டுக்கு அருகில் வசிப்பவர். அவர் எமது மகளின் திருமண நிச்சயதார்த்தம் சம்பந்தமாக எங்களுடன் மனஸ்தாபம் கொண்டிருந்தார். எமது மகள் முதலாவது எதிரியை மணப்பதற்காக நிச்சயம் செய்யப்பட்டிருந்த போதும் மகளுக்கும், காலஞ்சென்ற கணவனுக்கும் இந்தத் திருமணத்தில் சிறிதும் விருப்பம் இல்லாமல் இருந்தது.

"கணவன்மீது துப்பாக்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்ட பொழுது அவர் "ஐயோ" என்று சத்தமிட்டவாறு நிலத்தில் விழுந்தார். அதைத் தொடர்ந்து நான் சத்தம் போட்டுக் குழறியதை அடுத்து எனது சகோதரன் சம்பவம் நடந்த இடத்தை வந்தடைந்தார். தான், முதலாவது எதிரி டோர்ச் லைட்டுடனும், 2ம், 3ம் எதிரிகள் ஒவ்வொரு துப்பாக்கிகளுடனும் விழுந்தடித்துக் கொண்டு ஓடுவதைத் தான் கண்டதாகச் சகோதரன் என்னிடம் கூறினார்.

காலஞ்சென்றவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல காருக்குச் சொல்லி அனுப்பியபொழுதும் ஆஸ்பத்திரிக்கு அவர் கொண்டு செல்லப்படும் முன்பே உயிர்பிரிந்தது."

வழக்கு விசாரணை செப்டம்பர் மாதம் 28-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (ல- 3)

---

## மகள் இரத்த வெள்ளத்தில் கிடப்பதை தாய் கண்டாள்

நீர்கொழும்பு, ஆக. 28

"எனது மகள் இரத்த வெள்ளத்தில் காயங்களுடன் கிடந்ததைக் கண்டேன்"

நீர்கொழும்பு நீதவான் திரு. பீ. பி. நம்புக்வெல முன் விசாரிக்கப்பட்ட ஒரு கொலை வழக்கில் சாட்சியமளித்த கொன்கொடமுலையைச் சேர்ந்த ஜே. ஆராச்சி சேடஸ்திஹாமி என்ற 55 வயது பெண் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வருடம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி கொன்கொடமுலையைச் சேர்ந்த ஐரின் அப்புகாமியைக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த டொன் அந்தோனி அப்புகாமி என்பவர் மீது இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சாட்சி மேலும் கூறியதாவது:-

"இறந்தவர் எனது மகள். சம்பவம் நடந்த தினம் நான் வீட்டிலிருந்தேன்.

"அப்போது பிரான்சிஸ் என்பவர் எனது வீட்டிற்கு வந்து எனது மகள் கவலைக்கிடமான நிலையில் கிடப்பதாகத் தெரிவித்தார். உடனே நானும் எனது கணவரும் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்பட்ட இடத்திற்கு விரைந்து சென்றோம்"

"அங்கு எனது மகள் உடம்பு பூராவும் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டேன். உடனே அவளை கார் ஒன்றில் ஏற்றி நீர்கொழும்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம்.

"ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் எனது மகள், தன்னை எதிரி தான் காயப்படுத்தினார் எனத் தெரிவித்தாள்.

"எனது கணவர் எதிரிக்கு எதிராகப் பிறிதோர் வழக்கில் சாட்சியமளித்ததால் எமது குடும்பத்திற்கும் அவரது குடும்பத்திற்கும் இடையில் நல்லுறவு இருக்கவில்லை.

"இறந்தவரின் கணவரான எச். அந்தோனி அப்புகாமியும் சாட்சியமளித்தார்."

இந்நிலையில் நீதவான் வழக்கை செப்டம்பர் 17-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ல-7)

---

## ரிவோல்வர் பிடிபாடு

யாழ்ப்பாணம், ஆக. 28

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் ஒருவர், சில தொழிலாளர்களை பயமுறுத்தியதாக காங்கேசன்துறைப் பொலீசுக்குத் தகவல் கிடைத்தது.

பொலீசார் ஸ்தலத்துக்குச் சென்று பிரஸ்தாப நபரைக் கைது செய்ததுடன் அவரது தொழில் நிலையத்திலிருந்து ஒரு ரிவோல்வரையும் கைப்பற்றினர். விசாரணையின் பின்னர் பிரஸ்தாப நபர் பிணையில் விடப்பட்டுள்ளார். (ல-290)

---

## யாழ். சுங்கப் பகுதி திருட்டு வழக்கு எதிரிகளுக்கு விருந்து

யாழ்ப்பாணம், ஆக. 28

யாழ்ப்பாணம் சுங்கப் பகுதி திருட்டு வழக்கு அண்மையில் யாழ்ப்பாணம் நீதிபதி திரு. ஜே. ஜே. எப். ஏ. டயஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிகள் மூவரும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

இதனால் எதிரிகள் மூவரையும் அடுத்த மாதம் 11-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக்குவதற்கான பிடிவிறுந்து உத்தரவை நீதிபதி பொலீஸாரிடம் வழங்கினார். எம். பி. ஆர். சல்காது, ஜே. ஏ. தர்மதாசா, களனியைச் சேர்ந்த எஸ். ஆர். டி. பெரேரா ஆகியோர் மீதே பிடிவிறுந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில், யாழ்ப்பாணம் சுங்கப் பகுதியைச் சேர்ந்த பண்டகசாலையை உடைத்து தடைசெய்யப்பட்ட பொருட்களைக் களவாடியதாக மேற்கூறப்பட்ட மூன்று எதிரிகளையும் களனியைச் சேர்ந்த ஆர். எஸ். பெரேரா என்பவரையும் யாழ்ப்பாணம் பொலீஸார் சந்தேகத்தின்மீது கைது செய்து பின்பு பிணையில் விட்டிருந்தனர். (ல- 3)

---

## ஊழியர் ஆலோசனை சபை தேர்தல்

மட்டக்களப்பு, ஆக. 28

இலங்கை போக்குவரத்துச் சபை தொழிலாளர்கள் ஆலோசனைச் சபைக்கான தேர்தல்களை அடுத்த மாதத்தில் தேர்தல் திணைக்களம் நடத்தும் எனத் தெரிய வருகிறது.

இதற்கான வேட்பாளர் நியமனப் பத்திரத்திரங்கள் அடுத்த மாதம் 1-ம் திகதி ஏற்றுக் கொள்ளப்படும். (ல-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட சி. ஐ. டி. குழு விசாரணை மேற்கொள்ளும்:

# துப்பாக்கி குண்டு பார்சல்: சேகுவேரா தொடர்புடையதா?

புதன்கிழமை சாப்பாட்டுக் கடை ஒன்றில் கண்டு எடுக்கப்பட்ட துப்பாக்கிக் குண்டுகள் அடங்கிய பார்சலுக்கும் சேகுவேரா இயக்கத்துக்கும் தொடர்பு உண்டா?

இவ்விஷயமாக புறக்கோட்டைப் பொலீசார் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

பெருந்தொகையான துப்பாக்கிக் குண்டுகள் அடங்கிய இந்தப் பார்சலின் சொந்தக்காரரைக் கண்டு பிடிப்பதில் பொலீசார் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பு நகரில் துப்பாக்கி மருந்து விற்கும் சகல கடைகளிலும் பொலீசார் விசாரணை நடத்தினர். ஆனால் இதுவரை உருப்படியான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லையாம்.

யாரோ மறதியாக குறிப்பிட்ட சாப்பாட்டுக் கடையில் இந்தப் பார்சலை வைத்துச் சென்றதாகவே முன்பு பொலீசார் நினைத்தனர். ஆனால், அதைவிட மர்மமான விஷயம் ஒன்றும் இச் சம்பவத்துக்குப் பின்னணியாக இருப்பதாக இப்போது பொலீசார் நம்புகின்றனர்.

இந்தப் பார்சலை கடைக்காரர் கண்டு பிடிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன் ஐரோப்பிய உடை அணிந்த சில இளைஞர்கள் அந்த இடத்தில் இருந்து தேநீர் அருந்தி விட்டுச் சென்றதாகப் பொலீசார் கூறினர்.

கண்டு பிடிக்கப்பட்ட தோட்டாக்கள், பொலீஸ், இராணுவ துப்பாக்கிகளுக்கும், இயந்திர துப்பாக்கி, ரிவால்வர்களுக்கும் உபயோகிக்கக்கூடியதென கூறப்படுகிறது.

இவ் விசாரணைகளை புறக்கோட்டைப் பொலீசாரிடமிருந்து சேகுவேரா இயக்கம் பற்றி ஆராயும் விசேட சி. ஐ. டி. குழுவினர் பொறுப்பேற்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ல)

## சிங்கள போதனை வேண்டுமென பிரேரணை

ஊர்காவற்றுறை, ஆக. 28

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் உள்ள சகல பாடசாலைகளிலும் சிங்கள மொழியும் ஒரு பாடமாகப் போதிக்கப்பட வேண்டும் எனக் கோரும் பிரேரணை ஒன்றை சாவகச்சேரி நகரசபையின் அடுத்த மாதாந்தக் கூட்டத்தில் 11-ம் வட்டார அங்கத்தவர் திரு. வி. கனகசபை கொண்டு வரவிருக்கின்றார். (ல-3)

## மந்திரியும் எம். பி.யும் தூங்கியதால் அரசு கவிழ்ந்தது

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த மந்திரியும், ஒரு எம். பி.யும் நாடாளுமன்றத்தில் தூங்கியதால் நியூஸிலாந்து அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டது.

84 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு 3 பெரும்பான்மை ஸ்தானங்கள் உண்டு.

ஆளும் தேசியக்கட்சியை எதிர்க்கட்சியான தொழிற் கட்சி 36 - 35 வாக்குகளால் தோற்கடித்தது.

கடந்த 40 ஆண்டுகளில் இது போன்ற தோல்வி இதுவே முதலாவது ஆகும்.

"இது ஓர் அவமானகரமான செயல்: ஆனால் அரசாங்கம் இத் தோல்வியினால் ராஜினாமாச் செய்யாது" என தற்காலிகப் பிரதம மந்திரி திரு. ஜோன்மார்ஷல் கூறினர்.

வாக்கெடுப்பு நடைபெற்ற பின் உள்நாட்டு மந்திரி டேவிட் ஸீத் விடுத்த அறிக்கையில் தாம் தமது காரியாலயத்தில் நித்திரை கொண்டுவிட்டதாக ஒப்புக் கொண்டார்.

"எனது ஆசனத்தில் இருந்து வேலை செய்துகொண்டிருந்தேன். தற்செயலாகத் தூங்கிவிட்டேன். மணி அடித்தது எனக்குக் கேட்கவில்லை" என்றும் அவர் கூறினர்.

மற்றொரு சிரேஷ்ட அரசாங்க எம். பி. திரு. வெஸ்லி மன்ரோ, மணிச் சப்தம் கேட்டுத் தாம் நித்திரையிலிருந்து விழித்ததாகக் கூறினர். ஆனால் சபைக்குள் வருமுன் வாக்கெடுப்பு நடைபெற்று விட்டதாய்க் கூறினர். (ல)

## முன்னாள் மனைவியை கத்தியால் குத்தினர்

சடுதியாக ஏற்பட்ட கோபத்தினால் தனது முன்னாள் மனைவியைப் பல தடவைகள் கத்தியால் குத்தியவருக்கு 50 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் மனைவிக்கு நஷ்ட ஈடாக 50 ரூபா செலுத்தும்படியும் உத்தரவிடப்பட்டது.

கொழும்பு தெற்கு மேலதிக நீதவான் திரு. ஜோர்ஜ் அத்துருப்பான முன் விசாரிக்கப்பட்ட வழக்கொன்றிலேயே மேற்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

பிற்றக்கோட்டே தல்வத்துகொட வீதியில் வசிக்கும் ஓ. கே. டி. குணசிறி (39) என்பவர் தனது முந்திய மனைவியான பிலியந்தலை, வெறதெர றிவர் ரோட்டைச் சேர்ந்த நந்தாவதி பெரேரா (24) என்பவரை கடந்த 1969-ம் ஆண்டு செப்டம்பர் 29-ம் திகதி கத்தியால் குத்திக் காயம் உண்டு பண்ணியதாக மிறிஹானைப் பொலீசார் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

வாதியான நந்தாவதி பெரேரா பிரதிவாதியைச் சட்டப்படி திருமணம் செய்தவர். ஆனால் அவர் பிரதிவாதியிடமிருந்து விவாகரத்து பெற்று தனியாக வசித்து வந்தார்.

சம்பவம் நடந்த தினம் வாதி தொழிற்சாலை ஒன்றின் தொழிலாளிகளுக்கு தன்னால் கொடுக்கப்பட்ட கடனை வசூலிக்கப் பிற்றக்கோட்டே சென்றிருந்தார்.

காலை 10-30 மணியளவில் குறிப்பிட்ட தொழிற்சாலையின் முன்பாகக் காத்திருந்த வாதியைப் பிரதிவாதி ஏழு முறைகள் கத்தியால் குத்தியதால் வாதி கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் என்று நீதிமன்றதில் தெரிவிக்கப்பட்டது.

திடீரென ஏற்பட்ட கோபத்தினால் வாதியைத் தான் கத்தியால் குத்தியதாக பிரதிவாதி ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து நீதவான் 50 ரூபா அபராதம் விதித்து நஷ்டஈடாக 50 ரூபா முறைப்பாட்டுக்காரருக்குச் செலுத்தும்படியும் உத்தரவிட்டார். (ல-7)

## ஜெர்மனியில் துருக்கர்கள்

அங்காரா, ஆக. 28

மேற்கு ஜெர்மனியில் சட்ட விரோதமாக வேலை செய்யும் 30000 துருக்கியர்களுக்கு பொது மன்னிப்பு அளிக்குமாறு கோரப்பட்டிருக்கிறது.

## திருட்டு வழக்கில் எதிரிகள் இருவருக்கும் தண்டனை

தமது எஜமானரிடமிருந்து ரூபா 3,500 பணத்தைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு இரண்டுவருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அவருக்கு ஒத்தாசை புரிந்தவரெனக் கூறப்பட்டவருக்கு ஒரு வருட நன்னடத்தையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

புத்தளம் நீதவான் திரு. கே. பாலகிட்ணர் முன் விசாரிக்கப்பட்ட திருட்டு வழக்கு ஒன்றிலேயே மேற்கண்டவாறு தண்டனை விதிக்கப்பட்டது.

கட்டக்கடுவ என்ற இடத்தைச் சேர்ந்த திரு. மோகன் டேவிட் என்பவரிடமிருந்து 3,500 ரூபா வைத் திருடியதாக எதிரிகளான பன்னலையைச் சேர்ந்த எல். பீ. அபேதுங்கா, கட்டக்கடுவையைச் சேர்ந்த ஜோசப் பெர்னண்டோ ஆகிய இருவர்மீதும் இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

ரூபா 3,500 ஐத் திருடியதாகவும், திருடப்பட்ட பணத்தை வைத்திருந்ததாகவும் இவர்கள் மீது மேலும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்காரர் தோட்டத் தொழிலாளிகளுக்கான சம்பளத்தைச் செலுத்துவதற்காக ரூபா 4,000 கொண்டுவந்திருந்தார். இப் பணத்தை தனது படுக்கை அறையில் உள்ள லாச்சி ஒன்றில் பூட்டி வைத்துவிட்டுத் தலவில்லு தேவாலயத்திற்கு தனது மனைவியுடன் சென்றிருந்தார். இந் நேரத்தில் எதிரிகள் இருவரும் திருட்டுத் தனமாக வீட்டினுள் நுழைந்து படுக்கை அறை லாச்சியில் வைக்கப்பட்டிருந்த ரூபா 3.500ஐ திருடிச் சென்றுள்ளனர் என்று வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்ட நீதவான் மேற்குறிப்பிட்டவாறு தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்தார். (ல-7)


### பாரிசவாதம் அல்லது போலியோ

போன்ற கொடிய வியாதிகளையிட்டும் அநேக காலமாக பலவிதமான மருந்துகளை செய்தும் குணப்படாது மனம் வேதனை அடைந்து எவ்வளவு காலம் சென்ற கொடிய வாத நோய்களானாலும் சரியே. எங்கள் இராஜ வைத்திய அனுபவங்களின் மூலம் ஒரு லட்சத்துக்கு மேற் கொண்ட வியாதியஸ்தர்களை குணப்படுத்தி கைகண்ட

### பாரிசவாத தைலம்

இக் குறிப்பிட்ட வியாதியஸ்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் — தங்களின் வியாதிகளுக்கு இன்றே உபயோகித்து பூரண சித்தியடையுங்கள். திரும் வியாதிகள் சகல வகைப்பட்ட பாரிஸ வாதம். இளம்பிள்ளை வாதம், முடக்கு வாதம். நடுக்கு வாதம், பச்சை வாதம். பக்க வாதம். அண்ட வாதம், இடுப்பு வாதம். குடல் வாதம், நெஞ்சு அல்லது மாரடைப்பு, மொளிகளில் வீக்கம், கற்குழும்பு, குதிக்கால் நரம்புகள் வலி. வீக்கம். உடம்பில் பற்பல ஊரல்கள். சொறி. சிரங்கு, அல்லது குட்டிகள், கடிவேகம், புழு மேய்ச்சல். உடம்பில் கரும் புள்ளிகள், வெள்ளை படருதல். சிறுவர்களுக்கு கைகால் உறுப்புகள் பலஹீனம், முடக்கம், சோர்வு, கழுத்து, முதுகந்தண்டு, இடுப்பு பலஹீனம். தசை குறைந்து. கணுக்குக்கு கணு வீக்கம். முடக்கம் போன்ற போலியோ நோய்களையும் மேற்படி மேலே குறிக்கப்பட்ட எவ்வித கடினமான நோய்களையும் ஏழு தினம் சிகிச்சையின் பின் குணம் காண்பீர்கள்:— சகல விபரங்களையும் மருந்துடன் அனுப்பி வைப்போம். நேரிலும் அல்லது வி. பி. பி. தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

12 அவுன்ஸ் போத்தல் ஒன்றுக்கு ரூ. 100/-, 6 அவுன்ஸ் ரூ. 50/-
2 அவுன்ஸ் ரூ. 20/-. தபால் செலவு சதம் -/90.

### இழந்த சக்தியை மீண்டும் பெறுவதற்கு

### ரிஷி மன்மதன ஹல்வா

இன்றே சாப்பிடத் தவறாதீர்கள்

தெரிந்தும் தெரியாமலும் துர்ப்பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு தனது சக்தியை இழந்து அவதிப்படுவோர்களுக்கும் கொடிய கனவுகளால் தனது சக்தியை இழந்து இத்தன்மையான வகையில் நீர் வியாதிகள் ஏற்பட்டு நீர், சினி போகுதல், மாவு, வெண்ணெய் போன்ற வகையில் வெளியாகி இளைப்பு, இருமல். சோகை, மூட்டு வலிகள், அல்லது வீக்கம் ஏற்பட்டு நரம்புத் தளர்ச்சியுண்டாகிய ஆண் - பெண் இரு சாரார்களுக்கும் இல்லற வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு உலகத்தில் ஜீவியம் செய்யவே விருப்பமில்லாமல் மனவேதனைப்படும் அன்பர்களுக்கு இதோ உங்களுக்குப் புத்துயிர் தந்து இன்புற்று வாழ எங்களின் ரிஷி மன்மதன ஹல்வாவை சாப்பிடுவீர்களானால் ஆச்சரியப்படத்கூடிய வகையில் உங்கள் வாழ்க்கையை பிரதிபலிக்கச் செய்யும் ஓர் அற்புத சஞ்சீவி இந்த ரிஷி மன்மதன ஹல்வா.

30 நாள் மருந்து ரூ. 40/-, 15 நாள் மருந்து ரூ. 20/-
தபால் செலவு -/70 சதம்.

வி. பி. பி. தபாலில் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த 787 ஆண்டுகளாக கண்டி பூர்வீக மன்னர்களுக்கும், பல லட்சக்கணக்கான வியாதியஸ்தர்களுக்கும் பரம்பரை, பரம்பரையாகச் சிகிச்சை செய்து அளவற்ற பல நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுவரும் இராஜ வைத்தியர் வைத்தியரெத்தின முதலியார் அவர்கள் வகை.

**ஏ. எல். எம். ஜே. டி. உடையார்,**
வாத ரோக நிபுணர், இராஜ வைத்தியர்,
மடவலை பஜார், கண்டி.


இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 29 ஆகஸ்ட் 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12, (Ceylon).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org